| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 02.07.2026 | |
| CC No.106/2026 | |
| சாட்சி :PW5 | |
| பெயர் : திரு. கந்தசாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சௌந்தரராஜன் | தொழில் : விவசாயம் |
| கிராமம் : விவசாயம் | சமயம் : |
| தாலுக்கா : மேட்டுப்பட்டி | வயது : 27/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------------

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் என்னோடு மணிகண்டன் என்பவர் கையெழுத்து செய்தார். கடந்த 17.10.2025 அன்று எனது அத்தை வீட்டிற்கு முன்பு ஒரு நபர் வந்து தகராறு செய்து கொண்டிருப்பதாக அன்று இரவு 12.00 மணியளவில் எனக்கு தகவல் வந்தது. மோகன்ராஜ் குடிபோதையில் சத்தம் போட்டு கொண்டிருந்தார். பின்னர் போலீசார் அங்கு வந்து விசாரித்து வழக்கு பதிவு செய்தார்கள். இது தொடர்பாக வளநாடு போலீசார் மறுநாள் காலை எனது அத்தையின் வீட்டுருகே வந்து விசாரணை செய்தார்கள். போலீசார் அங்கு வந்து விசாரித்தற்காக எங்களிடம் கையெழுத்து பெற்றார்கள். **என்னிடம் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. போலீசார் எழுதிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது பற்றி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது அத்தை என்பதால் அவருக்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வரைபடத்திற்காக கையெழுத்து கேட்டார்கள்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.